**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61/2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 26.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Naresh (PW6) | வயது | 25 |
| தந்தை பெயர் | Stalin | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali | | |

முதல் விசாரணை

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது மணலி கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் 2,3,4 எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் வீட்டின் அருகே குடியிருந்து வருகிறார்கள். சம்பவ சமயத்தில் நான் வேலைக்கு ஏதும் செல்லவில்லை. சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் தேதி எனக்கு நினைவில்லை மாலை 5.30 மணியளவில் நான் எனது நண்பரின் வீட்டிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பியபோது வரதராஜர் தெருவில் தகராறு ஏற்பட்டதாக எனக்கு தெரிய வந்தது. எது சம்மந்தமாக யார் யாருக்கு எதிரே தகராறு ஏற்பட்டது என்பதை குறித்து எனக்கு தெரியாது. போலீசார் சம்பவம் சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 04.08.2021 அன்று மாலை சுமார் 3.30 மணியளவில் நான் வீட்டின் வெளியே நின்று எனது நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது எனது தெருவில் வசிக்கும் சமரசம், லெனின், அன்புகண்ணன் மற்றும் அவரது உறவினர்களான ஜெபகுமார் ஆகியோர் எனது வீட்டின் வெளியே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் ஜெயராஜ் என்பவருக்கு சொந்தமான காலி மனைக்கு வந்த ஜெயகணேஷ் மற்றும் உமேஷ்பாண்டி ஆகியோர் சத்தமாக பேசி சிரித்துக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் மேற்சொன்ன 4 நபர்களான இவ்வழக்கின் எதிரிகள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் எதற்காக வந்து சத்தமிடுகிறீர்கள் என்று கேட்டு அவர்களை நோக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அருகே அடுக்கி வைக்கப்பட்டிருந்த கண்ணாடிகளை எடுத்து எதிரிகள் அனைவரும் உமேஷ்பாண்டி என்பவரின் தலையில் அடித்ததாகவும், பின்பு இவ்வழக்கின் 2 முதல் 4 எதிரிகள் உடைந்த கண்ணாடி துண்டுகளை எடுத்து உமேஷ் பாண்டியின் வயிற்றிலும், தலையிலும் குத்தியதாகவும், அதை தடுக்க சென்ற ஜெயகணேஷ் என்பவரை எதிரிகள் நால்வரும் உடைந்த கண்ணாடியால் இத்துடன் செத்துபோ என்று தலையில் அடித்து அங்கிருந்து தப்பி சென்றதாகவும், பின்பு எனது தெருவில் வசிக்கும் செல்வராஜ் என்பவர் தகவல் அளித்ததின்பேரில் ஜெயராஜ் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்து காயம் அடைந்த நபர்களை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும்,

பின்பு இவ்வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், அது எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.

**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**<u>S.C. No. 61/2022</u>**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 26.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dasan (PW7) | வயது | 72 |
| தந்தை பெயர் | Ramasamy | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Manali | | |

முதல் விசாரணை

நான் மணலியில் குடியிருந்து வருகிறேன். நான் வேலைக்கு ஏதும் செல்லவில்லை. இவ்வழக்கில் 2 மற்றும 4 எதிரிகளை எனக்கு நன்கு தெரியும். ஆஜர் எதிரி ஜெயகுமார் என்பவர் அவர்களின் உறவினர் ஆவார். 2 மற்றும் 4 எதிரிகள் எனது வீட்டின் அருகே குடியிருந்து வருகிறார்கள். 3 ம் எதிரி அவரது உறவினர் என்ற அடிப்படையில் அவ்வப்போது அவரது வீட்டிற்கு வந்து செல்வார் அதன் பேரில் அவர்களை எனக்கு தெரியும். 2021 ம் வருடம் ஒரு நாள் தேதி எனக்கு நினைவில்லை நான் குடியிருக்கும் என்.எஸ்.கே தெருவில் தகராறு நடந்ததாக ஒருவாரம் கழித்து தெரிய வந்தது. தகராறு நடந்த நேரத்தில் நான் ஊரில் இல்லை. எது சம்மந்தமாக யார் யாருக்கு இடையே தகராறு ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது. சம்பவம் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி வேண்டி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 06.08.2021 அன்று நான் எனது சொந்த ஊரான நாகர்கோயிலுக்கு சென்றுவிட்டு வந்தபோது எனது நண்பரான எனது தெருவில் வசிக்கும் அசோக்குமார் என்பவர் கடந்த 04.08.2021 அன்று மாலை சுமார் 3.30 மணியளவில் எனது தெருவில் வசிக்கும் சமரசம், லெனின், அன்புகண்ணன் மற்றும் அவரது உறவினர்களான ஜெபகுமார் ஆகியோர் எனது வீட்டின் வெளியே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் ஜெயராஜ் என்பவருக்கு சொந்தமான காலி மனைக்கு வந்த ஜெயகணேஷ் மற்றும் உமேஷ்பாண்டி ஆகியோர் சத்தமாக பேசி சிரித்துக்கொண்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் மேற்சொன்ன 4 நபர்களான இவ்வழக்கின் எதிரிகள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் எதற்காக வந்து சத்தமிடுகிறீர்கள் என்று கேட்டு அவர்களை நோக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அருகே அடுக்கி வைக்கப்பட்டிருந்த கண்ணாடிகளை எடுத்து எதிரிகள் அனைவரும் உமேஷ்பாண்டி என்பவரின் தலையில் அடித்ததாகவும், பின்பு இவ்வழக்கின் 2 முதல் 4 எதிரிகள் உடைந்த கண்ணாடி துண்டுகளை எடுத்து உமேஷ் பாண்டியின் வயிற்றிலும், தலையிலும் குத்தியதாகவும், அதை தடுக்க சென்ற ஜெயகணேஷ் என்பவரை எதிரிகள் நால்வரும் உடைந்த கண்ணாடியால் இத்துடன் செத்துபோ என்று தலையில் அடித்து அங்கிருந்து தப்பி சென்றுவிட்டதாகவும் என்னிடம் கூறியதாக போலீசார்

விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த அன்று நான் ஊரில் இல்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் யார் யாருக்கும் இடையே எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.